கொடுந்துன்பம், மரண இருள், அணைக்க முடியாத நெருப்பு, நித்திய தண்டனை உள்ள இடம் என்று எச்சரிக்கிறது. பாவத்தினால் கிடைக்கும் மகிழ்ச்சிக்காக நீ செலவிடும் தொகை கொஞ்சமாக இருக்கலாம். ஆனால், நீ வாழ்க்கைப் பயணத்தை முடித்து செல்லும்போது நித்தியமாக துன்பம் அனுபவிக்கவேண்டியிருக்கும்.

## தப்பிக்கொள்ள ஒரே வழி

"கர்த்தராகிய இயேசு கூறுகிறார்: "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்" (யோவான் 10:10). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவமன்னிப்பையும், சமாதானத்தையும், நித்திய மகிழ்ச்சி நிறைந்ததுமான ஒரு புதிய வாழ்க்கையை உனக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். அது மிகவும் மகிழ்ச்சியான பூரண வாழ்க்கையாகும்.

"நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல், ஒருவரும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6) "என்னிடத்தில் வருகிறவனை, நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்று இயேசு கூறினார். மேலும், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9) என்று உறுதியளித்துள்ளார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற ஒரே இரட்சகர் தான் உண்டு. பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதை விட்டு மனந்திரும்பி, இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கு முன் இதை வெளிப்படையாக அறிவிப்பாயானால், அதுவே நீ இரட்சிப்பை அடையும் வழியாகும். "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று, உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9) என்று வேதாகமம் கூறுகிறது.

**விநியோகிப்பவர் முகவரி**

PLAYING WITH FIRE (Tamil)

*எங்கள் முகவரி:*
**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**
67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.
Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in



# நெருப்போடு விளையாடுவது

# நெருப்போடு விளையாடுவது

ஒருவித அலாதியான உற்சாகம் அல்லது புதுசக்தி கிடைப்பதைப்போல் உணருவதால் மக்கள் போதைப் பொருட்களை எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் நல்ல பிரகாசமான விளக்குகளின் வெளிச்சத்தில் நடனமாடும்பொழுது பலவிதமான போதைப் பொருட்களை எடுத்துக் கொள்வது ஒரு வித கலாச்சாரமாகி விட்டது. மூளையைக் குழப்பும் இந்த போதைப் பொருட்கள் சிறிது நேரம் அதிக மகிழ்ச்சியைக் கொடுப்பது போலக் காணப்பட்டாலும் சீக்கிரத்தில் மனச் சோர்வை ஏற்படுத்துகின்றன. அவை போலித்தனமான மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இந்தக் கலாச்சாரத்தில் சிக்கிக் கொண்டவர்கள், மனக்குழப்பத்தினால், பலவிதமான மனநலப் பிரச்சனைகளினால் சடுதி மரணத்தைச் சந்திக்கிறதைப்பற்றி நாம் எண்ணும்பொழுது அது நமக்கு துக்கத்தைக் கொடுக்கிறது. அவர்களது தன்னலமான மகிழ்ச்சிக்காகவே இவைகள் செயல்படுத்தப்படுகின்றன. ஒருவேளை இதை வாசிக்கிற நீர் போதைப் பொருட்களைப் பயன்படுத்தி இந்தப் போலியான மகிழ்ச்சியை அனுபவித்திருந்தாலோ, அல்லது இன்னமும் தொடர்ந்து அதைச் செய்து கொண்டிருந்தாலோ - 'ஜாக்கிரதை!' பாவத்தினால் கிடைக்கும் மகிழ்ச்சிகள் சிறிது நேரமே நிலைக்கும். அது வெறும் கனவே. விளக்குகள் அணைக்கப்பட்டு, ஆட்டமும், பாட்டமும் முடிந்து, உன் மகிழ்ச்சி முடிவுறும்போது, இன்னமும் நீ திருப்தியற்றவனாகவே இருப்பாய். உன் வாழ்க்கையின் விளக்கு அணைந்துபோய் உன் பூலோக வாழ்க்கை முடியும்போது, பாவத்தினால் உண்டான இன்பங்கள் முடிந்து போகும். நீயோ, அந்த அற்ப மகிழ்ச்சிக்காக உன் ஆத்துமாவை விற்றுப் போட்டாய்.
நீ நித்தியத்தையோ, மரணத்தையோ குறித்து நினைக்காதபடி பாவத்தினால் உண்டாகும் அற்ப மகிழ்ச்சியினால் பிசாசு உன் கவனத்தைக் கெடுத்தான். உண்மை என்னவெனில், நாம் யாவரும் ஒரு நாள் மரிக்கத் தான் வேண்டும். ஆனால் முக்கிய கேள்வி, "அதன் பின் என்ன?" இப்போது சொல், உன் ஆத்துமா மரணத்திற்குப்பின் நித்தியத்தை எங்கே கழிக்கும்?"

## விளைவுகள்

"மோசம் போகாதிருங்கள்; தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7) தன் வயலில் நெல்லை விதைத்த ஒரு விவசாயி அறுவடைக்காலத்தில் உருளைக் கிழங்கை அறுவடை செய்ய வரமாட்டான். இதுவே அறுவடையின் மாறாத பிரமாணம்" - நீ எதை விதைத்தாயோ, அதையே அறுப்பாய். தேவன் பாவங்களுக்குத் தண்டனை கொடுக்க மாட்டார் என்பதை நீ நம்பும்படி பிசாசு உன்னை ஏமாற்றுகிறான். ஆகவே தான் "ஏமாந்து விடாதே" என்று அவரது வேதபுத்தகத்தின்மூலம் தேவன் உன்னை எச்சரிக்கிறார்.

## நடைபிணங்கள்

"தோலில் புண்களும், பலவித கட்டிகளும் உண்டாகின்றன. உடலெல்லாம் கொடிய வேதனை; நரம்புகள் துடிக்கின்றன. தொடர்ந்து குழப்பமான சூழ்நிலை உருவாகிறது. மனதில் மனப் பிரமையும் நூதனமான பயங்களும் நிறைந்து மனக்குழப்பம் ஏற்படுகிறது. இது சிறு வயதிலேயே கூட மரணத்தை ஏற்படுத்துகிறது.
இதுவே போதை வஸ்துக்களைப் பயன்படுத்துபவர்களுக்கு வரும் கொடுந்துன்பமாகும். இதுவே நடைபிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் குடிகாரர்களின் கொடுமையாகும்" வாலிபனே! தேவன் கூறுவதை நீ கொஞ்சம் நின்று கவனிப்பாயா? ஒரு வேளை நீ கொஞ்சும் பயமின்றி போதை மருந்தெடுத்து, குடித்துக் கொண்டிருக்கத் தீர்மானித்திருந்தால், அதாவது குடியிலேயே உன் ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க முயற்சிப்பாயானால், எச்சரிக்கை! - ஒரு பயங்கரமான அறுவடைக்காலம் வருகிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). வேதாகமம் இங்கு கூறும் மரணம் என்பது தேவனை விட்டு நித்தியமாகப் பிரிந்து, நரகத்தில் போய் சேருவதேயாகும்.

அநேகர் நரகம் என்பது ஒரு சாப வார்த்தை, வேடிக்கையான சொல் அல்லது ஒரு சிறிய கற்பனை என்று நினைக்கிறார்கள். தேவனுடைய வார்த்தை, நரகம் ஒரு துக்கம் நிறைந்த இடம், அழுகை,